1977 ஜூலை 23]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரிசன மாண வர்கள் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் பெறுவதற்கு சான்றிதழ் கள் பெறவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் இலங்கை யிலிருந்து வந்த அகதிகள், பர்மாவிலிருந்து வந்த அகதிகள் இவர் கள் எல்லாம் தங்களுடைய பேமிலி கார்டு, பாஸ் போர்ட் இவைகள் வைத்திருந்தாலும் அதிலே அவர்கள் எந்த சமூதாயத் தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படாமல் இருக்கிற கார ணத்தால் தாசில்தார்கள் சான்றிதழ்கள் வழங்க மறுக்கிறார்கள். ஆகவே, பர்மா அகதிகள், இலங்கை அகதிகள் இவர்கள் எல் லாம் அங்கிருந்து இங்கே வந்திருக்கின்ற காரணத்தால் சான்றிதழ் பெறாமலேயே பாஸ் போர்ட்டை வைத்தே அவர்களுக்கு இலவச மாகப் பாடப்புத்தகங்கள் பெறக்கூடிய வழியைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றிப் பரி சீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. அவையுரிமைப் பிரச்சினைகள் :

(அ) "மெயில்" நாளேடு குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13—7—1977 அன்று இப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் " மெயில் " ஆங்கில நாளேட்டின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். 7—7—1977 அன்று " மெயில் " பத்திரிகையின் தலையங்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப்பேரவையில் 4—7—1977 அன்று நிகழ்த்திய உரையின் மீது கருத்துத் தெரிவித்து எழுதி உள்ளது என்றும், ஆனால் அதில் அவரது உரையைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அத் தலையங்கம் அமைந்திருக்கிறது என்றும் இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். இது குறித்து மெயில் பத்திரிகை ஆசிரியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர் எழுதியுள்ள பதிலில் கூறியிருப் பதாவது :—

". . . The matter in question does not refer to a news item but an editorial comment, based on the reported speech of the Chief Minister which gave me the impression that Mr. Latheef claimed

to be sole representative of the Muslim community. The comment was made in good faith without malafide or malicious intentions, nor was it motivated . . . .

The comment was based on the impression gained that he was claiming to be the sole representative of the Muslim community. If this comment infringes the privileges of the member in the Assembly, I am sorry. I make it once again clear that the comment was bonafide and not motivated."

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4—7—1977 அன்று ஆற்றிய உரையையும், "மெயில்" பத்திரிகையின் தலையங்கத்தையும் நான் கூர்ந்து கவனித்தேன். உறுப்பினர், தான் கொடுத்த அறிவிப்பிலேயே "எங்கள் கட்சியின் சார்பாக 10 பேர்கள் போட்டியிட்டு நான் ஒருவன்தான் சிறுபான்மை சமுதாயத்தின் ஏகப் பிரதிநிதியாக வந்துள்ளேன்" என்று கூறியுள்ளார்.

திரு. லத்திப் அவர்கள் பேசிய கருத்தை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதாவது "............ சில கருத்துக்கள் மாறுபட்டு இங்கே சொல்லப்பட வேண்டிய அவசியம் ஏற்படலாம்" என்றும் "முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன்தான் வந்திருக்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த அமைச்சரே இருக்கிறார். இன்னும் மூன்று இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இங்கே உறுப்பினர்களாக எங்கள் பக்கத்தில் வந்திருக்கிறார்கள் என்பதை நான் வற்புறுத்திக் கூறும்போது ஒரு மதத்திற்கு, ஒரு சாதிக்கு, ஒரு வர்க்கத்திற்கு மட்டும் நாங்கள் பிரதிநிதிகளாக வரவில்லை என்பதையும், எல்லோருக்கும் பிரதிநிதிகளாக—மக்கள் அனைவருடைய எண்ணத்தின் பிரதிநிதிகளாக—நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்ற நிலையில் எங்களுடைய கடமையைச் செய்து உங்களுக்கு ஒத்துழைப்புத் தருவோம்" என்றும் கூறியுள்ளார்கள்.

இத்துறையிலிருந்து உறுப்பினருக்கு 4—7—1977 அன்று நடந்த விவாதத்தில் உறுப்பினர் ஆற்றிய உரையின் படிவத்தை திருத்துவதற்காக 5—7—1977 அன்று அனுப்பியிருந்தும், இது வரை எந்த விதமான திருத்தமும் வரவில்லை.

பத்திரிகையின் தலையங்கத்திலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துத்தான் சரியானது என்பதை வலியுறுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இந்தத் தலையங்கம் உறுப்பினர் கருதுவதுபோல் ஒரு உள்நோக்கத்தில் எழுதியது என்று கருத இடமில்லை. பத்திரிகைகள் தலையங்கம் எழுதும்போது தங்கள் கருத்துக்களை வெளியிடும் வகையில் உறுப்பினர்கள்

கருத்துக்கு மாறுபட்டோ அதில் வேண்டுமென்றே திரித்துக் கூறியிருந்தாலோ ஒழிய அவையின் உரிமைக்கு மீறிய செயலாகக் கருதமுடியாது. இவை "fair comment" என்ற முறையில் தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் பத்திரிகைகளில் அரசியல் வாதிகளை அல்லது அவர்களது கருத்துக்களை விமர்சிக்கும்போது அது சிறிது கடுமையாக இருந்தாலும் நாம் அதைப் பெரிது படுத்தாது நம் கடமைகளை ஆற்ற வேண்டும். அவை உறுப்பினர்கள் இங்கு அச்சமின்றிப் பணியாற்ற உரிமை உற்றதுபோல பத்திரிகைகளும் சுதந்திரமாக இயங்கவேண்டும். இது ஜனநாயகத்தின் தேவை. எனவே நமது உரிமைகளைக் காப்பது போலவே நான் பத்திரிகைகளின் உரிமைகளையும் காக்கவேண்டுமெனக் கூறத் தேவையில்லை. "மெயில்" பத்திரிகையின் தலையங்கத்தினால் உறுப்பினர் அவர்கள் தனது கடமையைச் சரிவரச் செய்ய இயலாது போய்விடும் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. ஏனெனில் உறுப்பினர் அவர்கள் பிரச்சினையில் மிகுந்த கவனம் செலுத்திப் பணியாற்றுவதில் வல்லவர் என்பது எனக்குத் தெரியும்.

எனவே, பத்திரிகை ஆசிரியர் எந்தவித உள் நோக்கத்துடனும் தாம் தலையங்கம் எழுதவில்லை என்று கூறியிருப்பதால், மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று கருதி, இத்தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : No, தீர்ப்புக்கு மேலே பேசாதீர்கள். தயவுசெய்து தீர்ப்புக்குப் பிறகு பேசாதீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் ...... * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதைக் கேளுங்கள். உறுப்பினர் பேசிவிடலாம், ஒரு தீர்ப்பின் மீது தான் சொன்னதையே வலியுறுத்தி அவைத் தலைவர் நிற்கும்பொழுது பேசிவிடுவதாலே உங்களுடைய நிலைமையை ஸ்திரப்படுத்துவிட்டதாக அர்த்தமில்லை. தயவு செய்து அவையினுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கிப்போனால்தான் அவையை நன்றாக நடத்த முடியும். எனவே, தயவுசெய்து உட்காருங்கள். நான் நிற்கும்பொழுது நீங்கள் உட்கார வேண்டும். தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசியது அத்தனையையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே ....

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-35—9-4-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS